2019 ஜூலை 5] [திரு. மு.க. ஸ்டாலின்]

மின்சாரத் துறை மானியக் கோரிக்கைகளின்மீதான விவாதத்திற்கு பதிலளித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசும்போது இங்கே அறிவிப்புகளையெல்லாம் வெளியிட்டிருக்கிறார்கள். ஆக, அந்த அறிவிப்புகளிலே ஒன்றாக கோயம்புத்தூர், சேலம், திருநெல்வேலி, மதுரை, திருச்சி, தஞ்சாவூர், வேலூர் ஆகிய ஏழு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் அமைந்துள்ள போதை மீட்பு மையங்களுக்கு 3.64 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இது தேர்தல் நடத்தை விதிமுறைகளை மீறிய செயலாக இருக்கிறது. எனவே, இப்படிப்பட்ட அறிவிப்புகளை வெளியிடுவது முறையா என்பதைத் தங்கள் வாயிலாக நான் கேட்க விரும்புகிறேன்.

முற்பகல் 11–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை குறித்த மானியக் கோரிக்கைகள் மீதான விவாதம் நேற்று காலையிலேயே ஆரம்பித்துவிட்டது. வேலூர் பாராளுமன்றத் தேர்தல் தேதி அறிவிக்கப்படும் என்பது எங்களுக்குத் தெரியாது. துறை குறித்த அறிவிப்புகள் ஏற்கெனவே தயார் செய்யப்பட்டு, நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது. இனிமேல் வருகின்ற காலங்களில்தான் இத்தகைய அறிவிப்புகளை நிறுத்த முடியும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) நேற்றே அறிவிக்கப்பட்டுவிட்டது. (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் சம்பந்தப்பட்ட அந்த அறிவிப்பினை மட்டும் நிறுத்தி வைத்துவிடுகிறோம்.*

(ஆ) சேலம் உருக்காலையை தனியாருக்கு ஒப்படைக்கும் முயற்சி குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் உருக்காலையை தனியாருக்குத் தாரை வார்க்கக்கூடிய வகையில், உலகளாவிய* tender *விடப்பட்டுள்ளதாக*

ஒரு செய்தி வந்திருக்கிறது. எனவே, அதுகுறித்து தங்கள் அனுமதியோடு சில விளக்கங்களை அரசின் கவனத்திற்கு நான் கொண்டு வருகின்றேன்.

சேலம் உருக்காலைத் திட்டம் என்பது ஒப்பற்றத் தலைவர் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களுடைய கனவுத் திட்டம். அது அவருடைய இலட்சியத் திட்டமாக இருந்தது. திராவிட இயக்கத்தினுடைய முதன்மையான திட்டமாகவும் அது இருந்தது என்பது எல்லோருக்கும் தெரியும். அறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடனேயே, 23–7–1967 அன்று சேது சமுத்திரத் திட்டம், சேலம் உருக்காலைத் திட்டம் ஆகிய இரண்டு திட்டங்கள் குறித்தும் மத்திய அரசினுடைய கவனத்தை ஈர்க்கவும், தமிழர்களிடையே அதுகுறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும் அவர்கள் முதல்வராக இருந்த காலத்தில் மிகப் பெரிய எழுச்சி நாள் போராட்டத்தை நடத்தி, அது வரலாற்றிலே பதிவாகியிருக்கிறது.

‘சேலம் இரும்பாலை திட்டத்தை அறிவிப்பு செய்யவில்லை என்று சொன்னால், இந்த ஐந்தாண்டுத் திட்டத்தையே நான் ஏற்றுக்கொள்ளமாட்டேன்’ என்று அன்றைக்கு தமிழக முதல்வராக இருந்த எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்கள், 21–3–1970 அன்று டெல்லியில் நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் குரல் கொடுத்தார்கள். அதேபோல் பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும் இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு தொடர்ந்து குரல் கொடுத்தார்கள் என்பது நாட்டிற்கு நன்றாகத் தெரியும். அந்த அடிப்படையிலேதான், அன்றைக்கு பிரதமராக இருந்த அம்மையார் இந்திரா காந்தி அவர்கள் நாடாளுமன்றத்திலே அறிவித்தார்கள். 17–4–1970 அன்று நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேலம் உருக்காலை அமைக்கப்படும் என்ற ஓர் உறுதிமொழியை அறிவித்தார்கள். அதன்பிறகு தமிழக முதல்வராக இருந்த தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையிலே அதனுடைய அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது. அந்த அடிக்கல் நாட்டு விழாவிற்கு அம்மையார் இந்திரா காந்தி அவர்களே நேரடியாக வந்து, பங்கேற்று 16–9–1970 அன்று அந்தத் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டியிருக்கிறார்கள். 4 விரிவாக்கத் திட்டங்களின்மூலம் சேலம் உருக்காலைத் திட்டம் இலாபத்திலே இயங்கிக் கொண்டிருந்தது. காலப்போக்கிலே, அது மத்திய அரசின் மாற்றாந்தாய் போக்கினால் மட்டுமல்ல, புதிதாக எஃகு உருக்காலையோடு CRM–II, Mill–3 போன்றவற்றை

2019 ஜூலை 5] [திரு. மு.க. ஸ்டாலின்]

நிறுவிய காரணத்தால் நஷ்டத்தில் இயங்க வேண்டிய நிர்பந்தத்தை உருவாக்கி, சேலம் உருக்காலைத் திட்டத்தின்மீது வலுக்கட்டாயமாக திணிக்கப்பட்டது. ஆனால், இலாபத்தில் இயங்க பல்வேறு வழிகள் இருந்தும், SAIL (Steel Authority of India Limited) *நிறுவனத்திடம் இருந்த* scrap*–ஐக்கூட பயன்படுத்தவில்லை.* Scrap *இறக்குமதி செய்வது, இறக்குமதி செய்யக்கூடிய மூலப் பொருட்களை உடனடியாக* Customs*–லிருந்து பெறாமல் தாமதக் கட்டணம் செலுத்துவது, சேலத்தில்* Rail Coach Factory *அமைக்க மறுப்பது, 120 மெகா வாட் மின்சாரம் தயாரிக்கக்கூடிய திட்டம் மூலமாக ஆலைக்கு வேண்டிய மின்சாரத்தைப் பெற மறுப்பது போன்ற மாற்றாந்தாய் மனப்பான்மையோடு மத்திய அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. 2018–2019 ஆம் ஆண்டிற்கான* SAIL *நிறுவனத்தின் செயல்பாடுகள் குறித்த அறிக்கையில்* steel *நுகர்வோர் எண்ணிக்கை இந்தியாவில் மேலும் வேகமாக அதிகரிக்கும் என்றும், நவீனமயமாக்கல் மற்றும் விரிவாக்கப் பணிகள் 72 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில் மேற்கொள்ளப்படும் என்றும்* SAIL *அறிக்கையில் கூறியிருக்கிறது. ஆனாலும், 2,500–க்கு மேற்பட்டவர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பும், 5 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்களுக்கு மறைமுக வேலைவாய்ப்பும் அளிக்கும் சேலம் உருக்காலையை தனியார்மயமாக்க மத்திய அரசு துடித்துக் கொண்டிருக்கிறது. 4 ஆயிரம் ஏக்கர் நிலங்களோடு இருக்கக்கூடிய சேலம் உருக்காலையை தனியாருக்குத் தாரைவார்க்க சிறிதும் இரக்கம் இல்லாமல் முடிவு செய்து, தற்பொழுது விளம்பரமும் செய்யப்பட்டிருக்கிறது. அந்த விளம்பரத்திலேகூட தேதியைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். 1–8–2019 ஆம் தேதிக்குள் விருப்பம் உள்ளவர்கள் டெண்டர் போடலாம் என்று மத்தியில் இருக்கக்கூடிய* BJP *அரசு அறிவித்திருக்கிறது.*

முற்பகல் 11–50

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருந்தவரையிலே அந்த நிறுவனத்தை தனியாருக்குத் தாரைவார்க்கக்கூடிய மத்திய அரசின் முயற்சிகளை நாங்கள் முழுமையாகத் தடுத்திருக்கிறோம். மத்திய அரசில் பங்கேற்ற காலங்களில்தான் இதுபோன்ற தனியார்மயமாக்கல் திட்டத்திற்கு திராவிட முன்னேற்றக் கழகம் கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்திருக்கிறது. ஆகவே, நான் இந்த அவையிலே தங்கள் மூலமாக இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவது, எக்காரணத்தைக் கொண்டும் சேலம் உருக்காலையை

தனியார்மயமாக்கக் கூடாது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேரடியாகச் சென்று, மாண்புமிகு பிரதமரைச் சந்தித்து, இதற்கு அழுத்தம் தர வேண்டும். வேண்டுமென்றால், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய நாடாளுமன்ற உறுப்பினர்களும் உங்களோடு வந்து, உங்கள்கூட இருந்து அழுத்தம் தரக் காத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குரிய அனுமதியை நான் இப்பொழுதே தருகிறேன். மாண்புமிகு பாரதப் பிரதமரை உடனடியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சந்தித்து அதற்குரிய நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அறிஞர் அண்ணாவினுடைய இதயத்திற்கு மிக நெருக்கமான திட்டம், இந்தத் திட்டம். ஆகவே, அதற்குரிய நடவடிக்கையை இந்த அரசு எடுக்குமா என்பதைத் தங்கள் மூலமாகக் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழியில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய தலைமையில் நடைபெறுகின்ற இந்த அரசு எந்த ஒரு பொதுத்துறை நிறுவனத்தையும் தனியாருக்குத் தாரை வார்க்கவோ, டெண்டர் விடவோ, விற்கவோ அனுமதிக்காது. அந்த முயற்சியில் உங்களுடைய நிலைப்பாடுதான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசினுடைய நிலைப்பாடும் என்பதை நான் குறிப்பிடக் கடமைப்பட்டுள்ளேன். ஏற்கெனவே, NLC நிறுவனம் பற்றிகூட ஓர் உதாரணம் இருக்கிறது. அந்த அடிப்படையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 2, 3 முறை மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு memorandum கொடுத்திருக்கிறார்கள். Salem Steel Plant–னுடைய முழுமையான விவரங்கள் குறித்தும், தனியாருக்குத் தாரைவார்க்கக் கூடாது என்றும் ஒரு memorandum 15–2–2017 அன்று கொடுத்திருக்கிறார்கள். அதன் தொடர்ச்சியாக 26–4–2017 அன்று கடிதம் வாயிலாகத் தெரிவித்திருக்கிறார்கள். 15–12–2017 அன்று மீண்டும் ஒரு முறை கடிதம் வாயிலாகத் தெரிவித்திருக்கிறார்கள். இந்த டெண்டர் விடுவதை மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடிதம் வாயிலாகத் தெரிவித்ததைத் தொடர்ந்து Minister of Steel–ஐ நானும், துறையினுடைய முதன்மைச் செயலாளர்

2019 ஜூலை 5] [திரு. எம்.சி. சம்பத்]

அவர்களும் இணைந்து சென்று சந்தித்தோம். எக்காரணத்தைக் கொண்டும் Salem Steel Plant*–ஐ தனியாருக்குத் தாரை வார்க்கக் கூடாது, டெண்டர்விடக் கூடாது என்பதில் இந்த அரசு முழு முயற்சியோடு செயல்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இது 4 ஆயிரம் ஏக்கர் நிலம் உள்ள ஆலை என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் காலத்தில் உருவாக்கப்பட்டது* Salem Steel Plant *என்பதைக் கருத்தில்கொண்டு, உங்களுடைய எண்ணம்தான் இந்த அரசினுடைய நிலைப்பாடு என்பதையும் குறிப்பிட்டு, நிச்சயமாக* Salem Steel Plant*–ஐ தனியாருக்குத் தாரைவார்ப்பதை எக்காரணத்தைக் கொண்டும் இந்த அரசு சிறிதளவும் அனுமதிக்காது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்து அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுகின்றபோது, "எந்த பொதுத் துறை நிறுவனங்களையும் தனியார்மயமாக்குவது எங்களுடைய கொள்கை இல்லை. நாங்கள் அதை ஏற்றுக்கொள்ளமாட்டோம்" என்று இந்த செய்தியைப் பற்றிச் சொன்னார்கள். மத்தியிலே காங்கிரஸ் கட்சி ஆட்சி நடந்து கொண்டிருந்தபோது, இவர்களும் அங்கம் வகித்துக் கொண்டிருந்தபோதுதான்,* NLC*–யின் 10 சதவிகிதப் பங்குகளை விற்பனை செய்ய வேண்டுமென்று ஒப்புதல் கொடுத்தார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் அதை விற்கக் கூடாது என்று சொன்னார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதையும்மீறி அவர்கள் விற்க முடிவெடுத்தபோது 5 சதவிகிதப் பங்குகளை தமிழ்நாடு அரசு டிட்கோ மற்றும் மற்ற இரண்டு, மூன்று துறைகள் மூலமாக வாங்கி மாண்புமிகு அம்மா அவர்கள் அதைக் காப்பாற்றியிருக்கின்றார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதெல்லாம் நடந்தது உண்மைதான். அதை நான் மறுக்கவில்லை. ஆனால், உரிய வகையிலே அதற்கு எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறோம், கண்டனத்தைத் தெரிவித்திருக்கிறோம். நேரடியாகச் சென்று அழுத்தம் கொடுத்திருக்கிறோம், அதைத்தான் நான் சொன்னேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேரடியாகச் சென்று டெல்லியிலே மாண்புமிகு பாரதப் பிரதமரை சந்தித்து அழுத்தம் தர வேண்டும். அதற்கு தமிழகத்தின் சார்பிலே தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள், காங்கிரஸ் கட்சியினுடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள்–அவர்களிடத்தில் கலந்து பேசி–ஒட்டுமொத்தமாக உங்களோடு வந்து அழுத்தம் தருவதற்கு காத்திருக்கிறார்கள். அதற்கு இந்த அரசு முன்வருமா என்றுதான் நான் கேட்க விரும்புகிறேன்.*

முற்பகல் 11–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாகவே சேலம் உருக்காலையைத் தனியாருக்கு ஒப்படைப்பதற்காக முயற்சி செய்தார்கள். அந்த முயற்சி மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் தடுத்து நிறுத்தப்பட்டது. பல்வேறு வழிகளிலே முயற்சி செய்தார்கள். அந்த முயற்சிகள் எல்லாம் முறியடிக்கப்பட்டன. இப்போது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். பத்திரிகையிலும் செய்தி வந்திருக்கிறது. இன்றைக்கு தனியாருக்கு தாரைவார்ப்பதற்காக* tender *விடுவதற்காக பத்திரிகைச் செய்தி வந்திருக்கின்றது. ஆகவே, நீங்கள் சொல்லியதைப்போல, எங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர், உங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் சேர்ந்து முதற்கட்டமாக மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களையும், சம்பந்தப்பட்ட துறை அமைச்சர் அவர்களையும் சந்தித்து இந்தத் திட்டத்தைக் கைவிட வேண்டும் என்று அழுத்தத்தைக் கொடுப்போம். இது ஒரு முக்கியமான திட்டம், பிரதான*

திட்டம். இது மாநிலத்தில் ஒரு பொதுத் துறை நிறுவனமாக இருக்கின்ற காரணத்தாலே, இந்தப் பொதுத் துறை நிறுவனங்களை ஒவ்வொன்றாக எடுக்கின்றபோது மக்கள் மத்தியிலே ஒரு தவறான எண்ணம் ஏற்பட்டுவிடும் என்பதையெல்லாம் சுட்டிக்காட்டி, இன்னும் என்னென்ன ஷரத்துகள் இருக்கின்றனவோ, அவற்றையெல்லாம் சேர்த்து ஒரு மனுவாக, திராவிட முன்னேற்றக் கழகமாக இருந்தாலும்சரி, காங்கிரஸ் கட்சியாக இருந்தாலும்சரி, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமாக இருந்தாலும்சரி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவருமே ஒன்றாகச் சேர்ந்து, மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களையும், சம்பந்தப்பட்ட துறையின் மத்திய அமைச்சர் அவர்களையும் சந்தித்து அழுத்தத்தைக் கொடுப்போம். அதுமட்டுமல்லாமல், நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் நாம் இந்தப் பிரச்சினையை எழுப்பி, இதைத் தடுத்து நிறுத்துவதற்குண்டான ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளுக்கு எங்களுடைய அரசு முழு ஒத்துழைப்புக் கொடுக்கும். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் முழு ஒத்துழைப்பு நல்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.*

திரு. கரி. இராமசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் சொன்ன சேலம் உருக்காலைக்கு எந்தவிதமான பாதிப்பும் வராமல் தொடர்ந்து, தனியாருக்குச் செல்லாமல் இருக்க வேண்டுமென்பதற்கு காங்கிரஸ் கட்சியினுடைய முழு ஆதரவு உண்டு என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.*

(இ) சிவகங்கை மாவட்டம், காரைக்குடிக்கு குஜராத்திலிருந்து துளை போடுவதற்கு இயந்திரம் வந்திருப்பது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.*

திரு. கரி. இராமசாமி: *சிவகங்கை மாவட்டம், காரைக்குடியில் குஜராத் மாநிலத்திலிருந்து மிகப் பெரிய இயந்திரம் ஒன்று துளை போடுவதற்காக வந்திருக்கிறது. இது மத்திய அரசுக்கு சொந்தமான*